DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 233/2025

Miscellaneous :

Sessions : PW 8

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | ஜெயராமன் |
| Father / Husband Name | ஆறுமுகம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 19.05.2026

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது 31.05.2024 ம் தேதி ஒரகடம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது அச்சிறுபாக்கத்தில் வசித்து வருகிறேன். இதற்கு முன் கடந்த 02.05.2019 ம் தேதி மதுராந்தகம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று புகார் மனுவின் தன்மைக்கேற்ப நிலைய குற்ற எண்.173/2019, பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 506(2) இதச–வின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **(அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

2. பின்னர் சம்பவயிடம் சென்று சாட்சிகள் சுப்புரமணி மற்றும் தனசேகர் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5 ஆகவும், வரைபடம் அ.சா.ஆ.6 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 6 வரையிலான சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரிகளை தேடிவந்த நிலையில் எதிரிகள் செங்கல்பட்டு அமர்வு நீதிமன்றத்தில் முன் பிணை பெற்றதால் கைது செய்யவில்லை.

3. பின்னர் வழக்கில் காயம்பட்ட நபர்களுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஜெபசீலி என்பவரை விசாரணை செய்து விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் விசாரணை முடித்து எதிரிகளுக்கு எதிராக பிரிவுகள் 147, 294(பி), 323, 324, 506(2) இதச–வின் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

4. சம்பவம் நடந்த தேதி மற்றும் நேரம் என்ன என்றால் 01.05.2019 பகல் 10.00 – 12.00. புகார் கொடுக்கப்பட்ட தேதி மற்றும் நேரம் என்ன என்றால் 02.05.2019 மாலை சுமார் 18.30 மணி. சம்பவயிடம் சென்று மாதிரிவரைபடம் வரையப்பட்ட தேதி

03.05.2019 காலை 7.00 மணி. புகார்தாரர் மற்றும் வழக்கின் எதிரிகள் உறவினர்கள் என்றால் சரிதான். மணிகண்டனுக்கு காயம் எதுவும் ஏற்பட்டதா என்றால் லேசான காயம் ஏற்பட்டது. வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார். அண்ணாமலையும் தயாளனும் சேர்ந்து மணிகண்டனின் தாயாரை அசிங்கமாக பேசியதாக புகாரிலும், என்னுடைய விசாரணையிலும் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பூபாலன் என்பவர் மணிகண்டனின் தாயாரை கொம்பால் அடித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் கொம்பால் அடித்ததாக சொல்லவில்லை, கத்தியால் வெட்ட வந்ததாக சொல்லியுள்ளார்.

5. சொத்து பிரிப்பதற்காக அண்ணாமலை மணிகண்டனின் தாயாரிடம் ஆதார் கார்டு கேட்டதாக சொன்னாரா என்றால் சொன்னார். சம்பவத்தை எத்தனை பேர் பார்த்தார்கள் என்று விசாரணை செய்தேனா என்றால் ஞாபகமில்லை. 1 முதல் 6 வரையிலான பட்டியல் சாட்சிகள் உறவினர்கள் என்றால் சரிதான். சாட்சிகளை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன். புகார்தாரருக்கும் எதிரிகளுக்கும் இடையே சொத்து சம்மந்தமான வழக்கு ஏதேனும் உள்ளதா என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. சொத்து சம்மந்தமாக இருதரப்பினருக்கும் இடையே சம்பவ தினத்தன்று காலை 7.00 மணிமுதல் 10.00 மணிவரை வாக்குவாதம் நடந்தது என்றால் சரிதான்.

6. ஜோதி என்பவர் காலை 9.00 மணியளவில் ஆதார் கார்டு கேட்டதாக என்னுடைய விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் 10.00 கேட்டதாக சொல்லியுள்ளார். ஆதார் கார்டு தரவில்லை என்றால் அடிப்போம் என்று மிரட்டியதாக சொன்னரா என்றால் சொன்னார். தேவி என்பவர் முடியை பிடித்து அடித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். பூபாலன் கம்பியை எடுத்து தேவியின் காலில் அடித்ததாக சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை, கத்தியால் வெட்ட வந்ததாக சொல்லியுள்ளார். அப்போது ஜோதி கதறி அழுததாக சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. சம்பவத்தின்போது ஜோதி மயக்கம் அடைந்து கீழே விழுந்துவிட்டதாகவும் சொன்னாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை. மயக்க நிலையில் இருந்த அவரை மருத்துவமனையில் சேர்த்ததாக சொல்லியுள்ளாரா என்றால் மணிகண்டன் அவரது தாயாரை மருத்துமவனைக்கு அழைத்துச்சென்றதாக கூறியுள்ளார்.

7. ஜோதி எவ்வளவு நாள் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. சாட்சி நடராஜன் சம்பவத்தை நேரில் பார்த்ததாக என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் சம்பவத்தின் போது உடன் இருந்ததாக சொல்லியுள்ளார். சண்டை 3 ம் தேதி நடந்ததாக என்னிடம் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. அவர் புகார்தாரரின் அண்ணன் என்றால் சரிதான். புகார்தாரர் சண்டையை செல்போனில் படம் பிடித்து என்னிடம் கொடுத்தார்களா என்றால் இல்லை. சுப்புராயன் காவல் நிலையம் வந்தாரா என்றால் இல்லை. பிரபாகரன் சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக சொல்லியுள்ளாரா என்றால் சொல்லியுள்ளார். அவ்வாறு வாக்குமூலம் பெறவில்லை என்றால் சரியல்ல. பிரபாகரனை எந்த தேதியில் விசாரித்தேன் என்றால் 03 ம் தேதி சம்பவயிடத்தில் வைத்து விசாரித்தேன். அவரும் புகார்தாரருடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான்.

8. வழக்கில் பயன்படுத்தப்பட்ட பயங்கரமான ஆயுதங்களை கைப்பற்றினேனா என்றால் இல்லை. சொத்து சம்மந்தமாக இரு தரப்பினருக்கும் இடையே பல ஆண்டுகால பிரச்சனை உள்ளது என்றால் சம்பவத்தன்று காலையில் சொத்தை பிரப்பதற்காக ஆதார் கார்டு கேட்டபோதுதான் பிரச்சனை ஏற்பட்டது. மருத்துவரிடம்

காயச்சான்று ஏதேனும் பெற்றேனா என்றால் பெற்றேன். காயச்சான்று பெறப்பட்ட பிறகு மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். மருத்துவரிடம் பெறப்பட்ட வாக்குமூலத்தில் AR பதிவு குறித்து தான் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது என்றாலும், காயச்சான்று குறித்து வாக்குமூலம் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான். சம்பவயிடம் செல்லாமல் சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல் பாதிக்கப்பட்ட நபரிடம் மிகைப்படுத்தப்பட்ட புகாரை பெற்று எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்து அதற்கு ஆதரவாக இறுதி அறிக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.